பக்கங்கள்:-21

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2056 | மாசி 29 | வியாழக்கிழமை | 13.03.2025 | அதிர்வு 220

## தேர்தல் சட்டம் தொடர்பில் அவதானத்துடன் செயற்படுக!

**ஆணையாளர் நாயகம் வேண்டுகோள்**

உள்ளூராட்சி சபைத் தேர்தல் சட்டத்துக்கமைய தாக்கல் செய்யப்படாத வேட்புமனுக்கள் நிராகரிக்கப்படக் கூடிய வாய்ப்புக்கள் உள்ளதால் அது தொடர்பில் அவதானத்துடன் நடவடிக்கைகளை 06

# தமிழரசு வீறுநடை போடட்டும்




## ரெலோவில் இருந்து விலகி வந்த விந்தன் சூளுரை

(எஸ்.நிதர்ஷன்)

“எம் மக்களுக்காகவே நான் தமிழரசுக் கட்சியில் இணைந்து கொண்டுள்ளேன். ஆனால், இந்தக் கட்சியிலும் சில குறைகள், பிரச்சினைகள்இருந்தாலும்அதனைச் சீர்செய்து தொடர்ந்து தமிழரசுடனேயே பயணிப்பேன். தமிழரசு வீறுநடை போட வேண்டும்.”

- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் புதிய உறுப்பினர் விந்தன் கனகரட்ணம் தெரிவித்தார். 06

# ஐ.தே.க. தொகுதி அமைப்பாளர்களுக்கான நியமனத்தின்போது கோபமடைந்த ரணில்

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று புதன்கிழமை தொகுதி அமைப்பாளர்களுக்கான நியமனம் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது. இதன்போது இரண்டு தொகுதி அமைப்பாளர்கள் முன்னாள் அமைச்சர் ராஜித சேனரத்ன தொடர்பில் கூறிய போது ரணில் விக்கிரமசிங்க கோபமாக அவர்களுக்குப் பதிலளித்தார்.

தொகுதி அமைப்பாளர் ஒருவருக்கு நியமனக் கடிதத்தை வழங்கியபோது அவர் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் பேச முயற்சித்த போதிலும், அவர் அதனைக் கவனத்தில் கொள்ளவில்லை.

“ராஜித சேனாரத்ன வர 06






சில தினங்களுக்கு முன்னர் கனடாவில் மார்க்கம் பகுதியில் அந்த நாட்டில் பிறந்து வளர்ந்த ஈழத்தமிழ் வம்சாவளியைச் சேர்ந்த 20 வயது இளம் பெண் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார்.

அது பற்றிய செய்திகளை வெளியிட்ட ஊடகங்கள் சில அவரை யாழ் நகர பிதாவாக இருந்த அல்பிரட் துரையப்பாவின் பேத்தி என்று அடையாளப்படுத்தி செய்தி வெளியிட, அது பரபரப்பாகப் பல இடங்களிலும் பேசப்பட்டது.

அவர் கோண்டாவிலைச் சேர்ந்த வேறு ஒரு துரைப்பா என்பவரின் பேத்தியே தவிர முன்னாள் யாழ். நகர மேயர் அல்பிரட் துரையப்பாவின் பேத்தி அல்லர்.

இதனை அல்பிரட் துரையப்பாவின் ஒரே மகளான ஈஷா பெகோ துரையப்பா தெளிவுபடுத்தி இருக்கிறார். ஈஷா துரையப்பாவுக்கு இரண்டு புதல்வர்கள் மாத்திரமே இருக்கிறார்கள். மகள் இல்லை. அந்த இரண்டு மகன்மாரும் கூட கனடாவில் வசிக்கவில்லை.

ஆகவே அல்பிரட் 06



## பெண் வைத்தியர் மீதான பாலியல் வன்கொடுமையைக் கண்டித்து

# அநுராதபுரம் போதனா வைத்தியசாலைக்கு முன்னால் வைத்தியர்கள் நேற்று போராட்டம்

அநுராதபுரம் போதனா வைத்தியசாலைக்கு முன்னால் நேற்று புதன்கிழமை பகல் வைத்தியசாலையில் சேவையாற்றும் வைத்தியர்கள் மற்றும் அனைத்து தொழிற்சங்கங்களும் எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் பணிபுரியும் பெண் வைத்தியர் ஒருவரை முன்னாள் இராணுவச் சிப்பாய் ஒருவர் கத்தி முனையில் பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்திய சம்பவத்தைக் கண்டித்தும், வைத்தியசாலையில் பணிபுரியும் வைத்தியர்கள் உள்ளிட்ட அனைவரது பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு கோரியும் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.


















# பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் நேற்று பணிப்பகிஷ்கரிப்பு போராட்டம்

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் வைத்தியர்களால் நேற்று அடையாள பணிப்பகிஷ்கரிப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பெண் வைத்தியர்களுக்கான பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தே இப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.



# மாதவனை மேய்ச்சல் தரையில் சட்டவிரோதமான முறையில் குடியேறியுள்ளவர்களை அரசாங்கம் வெளியேற்ற வேண்டும்

## ஸ்ரீநேசன் எம்.பி. சபையில் கோரிக்கை




“இன நல்லினக்கத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் மாதவனை மேய்ச்சல் தரையில் சட்டவிரோதமான முறையில் குடியேறியுள்ளவர்களை அரசாங்கம் வெளியேற்ற வேண்டும். நீதிமன்றத்தின் தீர்ப்பினை செயற்படுத்த வேண்டும்.”

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து ஸ்ரீநேசன் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற 2025 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் உரையாற்றுகையில்,

“முந்தெணியாற்று கருத்திட்டம் 2017ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, இன்றுவரை நிறைவுப்படுத்தப்படவில்லை. வெளிநாட்டு நிறுவனத்தின் நிதியுதவியுடன் இந்த கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இந்த திட்டம் கைவிட்டு போகுமா என்ற சந்தேகம் மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்ட விவசாயிகளின் மத்தியில் காணப்படுகிறது.


உறுகாமம் – கித்துள் ஆகிய பகுதிகளை இணைத்து முந்தெணியாற்று திட்டத்தை அமுல்படுத்துவதால் 12 சிறுகுளங்களுக்கும், 25 ஆயிரம் ஹெக்டயார் விவசாய நிலங்களுக்கும் நீரை விநியோகிக்க முடியும். அதேபோல் மட்டக்களப்பு அம்பாறை ஆகிய மாவட்டங்களில் நிலவும் குடிநீர் பிரச்சினைக்கும் தீர்வு காண முடியும். அத்துடன் கரடியனாறு விதை உற்பத்தி மையத்துக்கும் நீரை விநியோகிக்க முடியும்.

இதுவரை காலமும் வலதுசாரி கொள்கை உடையவர்கள் ஆட்சியில் இருந்தார்கள். தற்போது இடதுசாரி கொள்கையுடையவர்கள் ஆட்சிக்கு வந்துள்ளார்கள் ஆகவே சமத்துவ அடிப்படையில் அபிவிருத்திகள் பகிரப்பட வேண்டும்.

மட்டக்களப்பு மயிலத்தமடு மாதவனை மேய்ச்சல் தரையில் எமது மக்கள் பல தசாப்தகாலமாக கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டு வருகிறார்கள். அண்மைகாலமாக அந்த பகுதியில் வெளிமாவட்டங்களை சேர்ந்தவர்கள் சட்டவிரோதமான முறையில் குடியமர்த்தப்பட்டார்கள்.

மயிலத்தமடு மாதவனை மேய்ச்சல் தரையில் சட்டவிரோதமான முறையில் குடியமர்த்தப்பட்டவர்களை உடனடியாக வெளியேற்றுமாறும், இந்த சட்டவிரோத செயற்பாடுகள் இன நல்லினக்கத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. இருப்பினும் நீதிமன்றத்தின் தீர்ப்பு செயற்படுத்தப்படவில்லை.

இன நல்லினக்கத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் மாதவனை மேய்ச்சல் தரையில் சட்டவிரோதமான முறையில் குடியேறியுள்ளவர்களை அரசாங்கம் வெளியேற்ற வேண்டும். நீதிமன்றத்தின் தீர்ப்பினை செயற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.”– என்றார்.



# சிவனொளிபாதமலைக்கு அதிக யாத்திரிகள் வருகை

ஹட்டன் வீதியூடாக அதிகளவான யாத்திரிகர்கள் சிவனொளிபாதமலைக்கு வழிபடுவதற்கு வருகை தருகின்றனர் என நல்லதன்னிய பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இன்று பூரணை தினம் என்பதால் ஏராளமான பக்தர்கள் வருகை தரவுள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

யாத்திரிகர்களின் வாகனங்களை நிறுத்துவதற்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளதாகவும், பக்தர்களின் பாதுகாப்பிற்காக பாதுகாப்பு வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் நல்லதன்னிய பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமைப் பரிசோதகர் ஈ.ஏ.பி.எஸ்.வீரசேகர தெரிவித்தார்.

மது அருந்துபவர்களையும், போதைப்பொருள் கொண்டு வருபவர்களையும் கைது செய்ய ஒரு சிறப்புத் திட்டம் தொடங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# திருடப்பட்ட 2,267 அதி சொகுசு வாகனங்கள் போக்குவரத்தில் ஈடுபடுகின்றன என தகவல்!



போலி இலக்கத்தகடுகளை பயன்படுத்தி போக்குவரத்தில் ஈடுபடும் 2,267 அதி சொகுசு வாகனங்களை பொலிஸார் இனங்கண்டுள்ளனர்.

போக்குவரத்து விதிகளை மீறும் ஓட்டுநர்களைச் சட்டத்தின் முன் நிறுத்துவதற்காக ஆரம்பிக்கப்பட்ட கொழும்பு நகரத்தின் பல பகுதிகளில் பொருத்தப்பட்டுள்ள பாதுகாப்பு கமராக்கள் ஊடாக இந்த வாகனங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

இந்த கமராக்கள் ஊடாக போக்குவரத்து விதிகளை மீறும் ஓட்டுநர்களை சட்டத்தின் முன் நிறுத்துவதற்காக நடவடிக்கைகள் கடந்த வருடம் பெப்ரவரி மாதம் ஆரம்பிக்கப்பட்டது.

கடந்த டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் மோட்டார் வாகன விதிகளை மீறிய 12,246 வாகனங்களை பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர்.

கமராக்களில் இனங்காணப்பட்ட வாகன இலக்கங்களின் படி அதன் பதிவு செய்யப்பட்ட உரிமையாளர்களை இனங்கண்டு உரியச் சட்டங்கள் அமுல்படுத்தப்படுகிறது.

இந்தப் பிரிவில் உள்ள காவல்துறை அதிகாரிகளுக்கு மோட்டார் வாகனத் திணைக்களத்தின் தரவு அமைப்புடன் நேரடியாக இணைக்க வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

கொழும்பு நகரில் போக்குவரத்து விதிகளை மீறியதாகப் பாதுகாப்பு கமராக்களில் பதிவான 12,246 வாகனங்களில், பதிவு செய்யப்பட்ட உரிமையாளர்களைக் கண்டறிந்த பிறகு 2,267 வாகனங்கள் திருடப்பட்ட வாகனங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

இவற்றில் 2267க்கும் மேற்பட்ட வாகனங்களின் இலக்கத் தகடுகள் மோட்டார் போக்குவரத்து ஆணைக்குழுவில் பதிவு செய்யப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

சில வாகனங்களின் பதிவு செய்யப்பட்ட உரிமையாளர்களை விசாரித்தபோது, இந்த நபர்களிடம் உந்துருளியை கூட வாங்குவதற்கு வசதி இல்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த 2,267 வாகனங்களும் திருடப்பட்ட வாகனங்கள் எனச் சந்தேகிக்கப்படுவதாக காணொளி கண்காணிப்புப் பிரிவின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

அந்த வாகன இலக்கங்களை நாடு முழுவதும் உள்ள காவல் நிலையங்களுக்கு அனுப்பி, விரைவில் சட்ட அமலாக்க நடவடிக்கை ஆரம்பிக்கப்படும் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.



# விவசாயிகளே தமது மரக்கறி விலையை தீர்மானிக்கும் நடைமுறையை விரைவில்

நுவரெலியா பொருளாதார மத்திய நிலையத்தில் நில வும் விலை மோசடியை விரைவில் நிறுத்துவதற்கு நடவ டிக்கை மேற்கொள்ளப்படுமென வர்த்தக, வாணிப, மற்றும் உணவுப் பாதுகாப்பு பிரதி அமைச்சர் ஆர். எம். ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

அதற்காக முறையான தீர்வு பெற்றுக் கொடுப்பதற்கு அரசாங்கத்துடன் ஒன்றிணைந்து நடவடிக்கை மேற் கொள்வதாகப் பிரதி அமைச்சர் தெரிவித்தார்.

நுவரெலியா பொருளாதார மத்திய நிலையத்திற்கு நேற்று கள விஜயம் மேற்கொண்ட போது பிரதி அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

பிரதி அமைச்சர் மேலும் தெரிவிக்கையில், “பல பொரு ளாதார மத்திய நிலையங்களில் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வுகளின் போது இந்த விலை மோசடி முக்கிய பிரச்சி னையாக இனங்காணப்பட்டுள்ளது.

விவசாயிகளுக்கு தமது மரக்கறிகளுக்கான விலை யைத் தீர்மானிப்பதற்குக்கூடிய வகையிலான முறையை நடைமுறைப்படுத்தப்படும்.” என்றார்.

# தண்டனைகளிலிருந்து படையினர் பாதுகாக்கப்பட்டதன் துணிவுதான் நாட்டில் முன்னாள் படைத்தரப்பின் குற்றங்கள் அதிகரிக்க வழிவகுத்தது

## முன்னாள் தவிசாளர் நிரோஷ் காட்டம்



நாட்டில் முன்னாள் படையினர் தொடர்புபட்ட பாரிய குற்றச் செயல்கள் அதிகரித்துள்ள நிலைமைக்கு, நாட்டில் தமிழ் மக்களுக்கு எதிராக அரச இயந்திரமும் இராணுவமும் மேற் கொண்ட மிலேச்சத்தனமான மனித உரிமை மீறல்களுக்கு எவ்வித பொறுப்புக்கூறலும் இடம்பெறாது சட்டத்தில் இருந்து படையினரை அரசு பாதுகாத்துவரும் துணிவுதான் காரணம் என்பதை ஒட்டுமொத்த நாடும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

– இவ்வாறு வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

இன்று நாட்டின் நீதிமன்றத்தின் உள்ளே படுகொலை நடக்கின்றது. வைத்தியசாலையில் பணியாற்றிய பெண் வைத் தியர் அரச வளாகத்தினுள் பாலியல் வல்லுறவுக்கு ஆளாக நேர்கின்றது. சாதாரணமான துப்பாக்கிப் பிரயோகங்கள் எங்கும் நடக்கின்றன. இவற்றிற்குப் பின்னால் முன்னாள் இராணுவத்தினர் உள்ளனர். நாட்டின் பொலிஸ் மா அதிபராக பதவி வகித்தவர் நீதிமன்றக் கட்டளைக்கு மதிப்பளிக்காமல் மறைந்துள்ளார். அவருக்கு பகிரங்க பிடியாணை பிறப்பிக்கப் பட்டுள்ளது. இந்த நிலைமை நாட்டின் பாதுகாப்புத் தரப்பு மற்றும் சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட வேண்டிய பொலிஸ் தரப்பின் தொழில்சார் ஒழுக்கத்தை பகிரங்கப்படுத்தி நிற்கின் றன. படைகளின் தொழில் முகப்படுத்தலில் ஒழுக்கம் இன்மை களை வெளிக்காட்டுகின்றன.

சாதாரணமாக இவற்றை படைகளில் இருந்து விலயோர் என்று கைவிரித்து விட முடியாது. படைகளில் பணியாற்றிய மனிதர்கள் உயர் ஒழுக்கம் மற்றும் கட்டளைகளை நிறை வேற்றும் தகுதியை அவர்களது சேவைக்கால பயிற்சி மற்றும் சத்தியப்பிரமாணங்களின் வாயிலாகப் பெற்றிருக்க வேண்டும். இது இலங்கையில் நடைபெறவில்லை.

காரணம் தமிழ் மக்கள் மீது படைகளில் இருந்தவர்கள் அத்தனை பாலியல் வல்லுறவுகள், மிலேச்சத்தனமான படு கொலைகள், சிறார் படுகொலைகள், மிலேச்சத்தனமான மனித உரிமை மீறல்களை செய்த போதும், அவற்றுக்கு அரச பாதுகாப்பு அளிக்கப்பட்டதன் விளைவே இலங்கையில் இராணுவ ஒழுக்கம் மற்றும் பொலிஸாரின் ஒழுக்கம் புகட்டப் படாத குற்றக் கலாச்சாரத்திற்கான அடிப்படை என்பதை அரச இயந்திரம் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

பல சந்தர்ப்பங்களில் நாட்டின் ஜனாதிபதிகள், பொது மன்னிப்பு அதிகாரத்தினைப் பயன்படுத்திக் கூட தமிழ் மக் கள் மீது மிலேச்சத்தனமான கொலைகளை புரிந்த படைத் தரப்பினரை குற்றத்திற்கான தண்டனையில் இருந்து பாது காத்துள்ளனர்.

இவ்வாறான மனித நாகரிகமற்ற – சட்டத்திற்கும் நீதிக் கும் ஏற்புடையதல்லாத – கலாசாரம் தமிழர்களுக்கு எதிரான சிங்கள் பேரினவாதத்தின் வெற்றியாக அரசும் மாறி மாறி ஆட்சியேறிய அரசாங்கங்களும் கட்டிவளர்த்த கலாச்சாரம் தான். அதுவே இன்று நாடே குற்றங்களுக்குள் மூழ்கக் கார ணமாகவுள்ளது.

இந் நிலையில் துரிதமாக மக்களை பாதுகாக்க நடவ டிக்கை எடுக்கவேண்டும். தமிழ் மக்களுக்கு எதிரானிழைக்கப் பட்ட விடயங்களை படையினரைப் பாதுகாக்கின்றோம் என நினைத்து அரசாங்கம் பாதுகாக்கக்கூடாது. குற்றங்களுக்கு பொறுப்புச் சொல்லாத கலாச்சாரம் ஒருபோதும் குற்றங்கள் மீள நிகழாமையினை உறுதிப்படுத்தாது. – இவ்வாறு முன்னாள் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத்தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

துரையப்பாவிற்குப் பேத்தியும் இல்லை. அப்படி ஒருவர் சுட்டுக் கொல்லப்படவும் இல்லை.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் நேரடியாக சம்பந்தப்பட்ட சம்பவத்தில் யாழ் நகர மேயர் அல்பிரட் துரையப்பா சுட்டுக் கொல்லப்பட்டார். அவருக்கு யாழ்ப்பாணத்தில் சிலை எடுப்பது குறித்து அவரது ஆதரவாளர்கள் மட்டத்தில் பேசப்பட்டு வரும் நிலையில் இத்தகைய தவறான செய்தி பரப்பப்பட்டிருக்கின்றது.

\+ + +

அண்மைக்காலத்தில் – 2013 ஆம் ஆண்டுக்குப் பின்னர் – இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தல்களைத் தவிர்த்து விட்டு தேசிய ரீதியில் நடத்தப்பட்ட தேர்தல்களைக் கணக்கெடுத்தால் அவை ஐந்து.

ஐந்து தேர்தல்களுக்கான வேட்பு மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்ட போதும் ஒரு தேர்தல் நடத்தப்படவில்லை. ஆக நான்கு தேர்தல்கள் நடந்தன. ஐந்தாவது தேர்தலுக்கான வேட்பு மனுவும் (2023 உள்ளூராட்சி சபை தேர்தல்) ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இந்த ஐந்து தேர்தல்களிலும் நாட்டின் தமிழர் பிரதேசத்தில் போட்டியிட்ட ஒருவர் என்றால் அவர் இலங்கை தமிழரசுக் கட்சியின் பிரமுகர் இம்மானுவேல் ஆனோல்ட் தான்.

முதலில் மாகாண சபை தேர்தல், பின்னர் உள்ளூராட்சி தேர்தல், தொடர்ந்து நாடாளுமன்றத் தேர்தல், அதன் பின்னர் உள்ளூராட்சி தேர்தலுக்கான வேட்பு மனு தாக்கல், அதன் பிறகு கடைசியாக பொது தேர்தல். இப்படி ஐந்து தேர்தல்களிலும் தமிழரசுக் கட்சியில் தவிர்க்கவே முடியாத வேட்பாளராக ஆனோல்ட் இருந்தார்.

ஆனால் இந்த முறை அவர் போட்டியிட மாட்டார் என்று இப்போது தமிழரசு கட்சி கூறுகிறது.

2023 இதே தேர்தலுக்காக வேட்பு மனு தயாரான போதும், அப்படித்தான் தமிழரசு கட்சி தலைமை கூறியது. வட்டாரத்தில் போட்டியிட மாட்டார், ஆனால் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காக அவரது பெயரை பொது வேட்பாளர் பட்டியலில் சேர்த்துக் கொள்வோம் என்று தலைவர்கள் கூறினார்கள்.

ஆனால் தமிழரசுக் கட்சியின் யாழ் தொகுதிக் கிளை பொறுப்பாளர் என்ற முறையில் மாநகர சபைக்கு வேட்பாளர்களைத் தேர்வு செய்து, பட்டியலைத் தயாரிக்கும் பொறுப்பு 2023 இல் அவரிடம்தான் ஒப்படைக்கப்பட்டிருந்தது. வேட்பாளர்கள் கையொப்பமிட்ட போது அவரது பெயர் பட்டியலில்தான் இருந்தது. வட்டாரத்தில் அல்ல. ஆனால் அடுத்த நாள் காலையில் தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுவில் அவர் வழமையாகப் போட்டியிடும் இருபதாவது வட்டார வேட்பாளராக அவர் பெயர் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்தத் தடவையும் அவர் போட்டியிட மாட்டார் என்று கட்சியின் தலைமைப் பீடம் தெரிவித்தாலும், கடைசி நேரத்தில் வேட்பு மனு தாக்கல் செய்யப்பட்ட பின்னர்தான் அவர் போட்டியிடுவாரா இல்லையா என்பதை உறுதி செய்ய முடியும் என்று நினைக்கிறேன்.

அவருக்கு இப்போது ஒரு பிரச்சினை. கட்சியின் தொகுதிக் கிளையின் அனுமதியில்லாமல் அந்தத் தொகுதிக் கிளையில் புதிய உறுப்பினர்களை சேர்க்கக் கூடாது என்ற ஒரு நிலைப்பாடு உள்ளது. கட்சியின் தற்போதைய பதில் தலைவர் சிவஞானம் இதை அடிக்கடி வலியுறுத்தி வருபவர். ஊடக நிறுவனம் ஒன்றின் நிர்வாகி ஒருவர் தமது நல்லூர் தொகுதியைச் சேர்ந்தவராக இருக்க, தமக்கோ அந்தத் தொகுதி கிளைக்கோ தெரியாமல் கட்சியின் இணைவதற்கான அவரின் விண்ணப்பத்தை ஏற்றமை எங்ஙனம் என்று சிவஞானம் முன்னர் நெருப்பெடுத்திருந்தார்.

இப்போது, இதுவரை காலமும் ரெலோவில் இருந்த விந்தன் கனகரத்தினத்தை தன்னுடைய யாழ் தொகுதிகளைக்குத் தெரியாமல் தலைவர் சி.வி.கே.சிவஞானம் அங்கத்தினராகச் சேர்த்துக் கொண்டிருப்பது எந்த வகையில் நியாயம் என்று கேள்வி எழுப்புகிறார் ஆனோல்ட் எனத் தெரிகிறது.

விந்தனின் வீடு நல்லூர் தொகுதியில் இருப்பதால், நல்லூர் தொகுதிக் கிளையூடாக அவரது விண்ணப்பப் படிவத்தை சிவஞானம் ஏற்றிருப்பாரோ என்னவோ தெரியவில்லை. அடுத்து வரும் நாள்களில் கட்சியின் கூட்டத்தில் இந்த விடயம் எதிரொலிக்கும் என எதிர்பார்க்கலாம்.

\+ + +

வரும் உள்ளூராட்சித் தேர்தலில் எந்தப் பக்கம் சாய்வது, என்ன நிலை எடுப்பது என்ற குழப்பத்தில் இருந்த தமிழ்த் தேசிய பசுமை இயக்கமும், அதன் தலைவர் ஐங்கரநேசனும், உறுதியாகத் தங்களைத் தவிர மற்றவர்கள் எல்லோரும் கரட் குறைந்த தங்கங்கள் என்று விமர்சித்து வந்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பக்கம் சாய்ந்து விட்டனர்.

அந்தப் பக்கம் சாய்வதற்கு இன்னும் சில பிரமுகர்கள் தயாராக இருக்கின்றனர் என்று தெரிகின்றது. ஆனால் வருகின்ற எல்லோரும் தேசிய இனப் பிரச்சினைக்கு 13ஆவது அரசமைப்பு திருத்தம் தீர்வே அல்ல என்ற தங்களின் உறுதியான நிலைப்பாட்டை வெளிப்படுத்துபவர்களாக இருக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி எடுத்திருப்பதாகத் தெரிகிறது. ஆனால், 13 ஐயும் பிடித்துத் தொங்கிக் கொண்டிருக்கும் சிவாஜிலிங்கம் – சிறிகாந்தா போன்றோர் 13 ஐ அடியோடு வெட்டி விடச் சம்மதித்தால், கஜேந்திரகுமார் அணிப்பக்கம் அவர்களும் இணைந்து விடுவார்கள் என்று தெரிகிறது.

---

## ஐ.தே.க. தொகுதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முன்னர் நாம் தனியாகவே அனைத்து பணிகளையும் முன்னெடுத்தோம். தற்போது அவருக்கு மாத்திரம் முன்னுரிமையளிப்பது தவறாகும்." – என்று குறித்த தொகுதி அமைப்பாளர் கூறினார்.

எவ்வாறிருப்பினும் அதற்குப் பதிலளிக்காத ரணில், அவரைச் சென்று அமருமாறு கூறினார்.

எனினும்,அங்குஅமர்ந்திருந்தமேலும் இருவர் எழுந்து, கருத்துக்களைத் தெரிவிக்க முயற்சித்த போதிலும், அவர்களையும் அமருமாறு ரணில் கூறினார்.

அவர்கள் தொடர்ந்தும் பேச முயற்சித்தமையால் சற்று கடுந்தொனியில், "அமருமாறு கூறினால் தயவு செய்து அமருங்கள்" என்று மீண்டும் மீண்டும் ரணில் கூறினார்.

இதன்போது ஐ.தே.க. தவிசாளர் வஜிர அபேவர்தன அவர்களின் அருகில் சென்று அவர்களைச் சமாதானப்படுத்த முயற்சித்தார். எனினும், அவர்கள் அங்கிருந்து வெளியேறியமை குறிப்பிடத்தக்கது.

## தேர்தல் சட்டம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முன்னெடுக்குமாறு தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீரத்நாயக்க கேட்டுக்கொண்டார்.

நேற்று புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"எதிர்வரும் 19ஆம் திகதி நண்பகல் 12 மணியுடன் கட்டுப்பணம் செலுத்தும் காலம் நிறைவடையவுள்ளது. தேர்தலுக்கான சகல ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. வேட்புமனுத் தாக்கல் செய்யவுள்ள சகல அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களிடம் சட்டத்தின் 28ஆவது உறுப்புரைக்கமையஅதற்குரியநடவடிக்கைகளைமுன்னெடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

வேட்புமனுக்களை இரத்துச் செய்வது எமது நோக்கமல்ல. தேர்தலில் போட்டியிட விரும்பும் அனைவருக்கும் அதற்கான வாய்ப்பளிக்கப்பட வேண்டுமெனில் வேட்புமனுக்கள் அதற்கேற்றவாறு தவறுகள் இன்றி சமர்ப்பிக்கப்பட வேண்டும். அதே போன்று 25 சதவீத பெண் பிரதிநிதித்துவம், 25 சதவீத இளைஞர் பிரதிநிதித்துவம் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது.

அதேபோன்று வேட்பாளர்களின் சொத்து மதிப்பு விவரங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டியது கட்டாயமாகும். இது தொடர்பில் விசேட அவதானம் செலுத்துமாறு அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களிடம் கேட்டுக்கொள்கின்றோம்.

தேர்தலின்போது வாக்காளர்களைப் போன்று வேட்பாளர்களுக்கும் ஜனநாயகப் பொறுப்பு காணப்படுகின்றது என்பதால் அதற்கேற்ப செயற்படுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்." – என்றார்.

---

## தமிழரசு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ரெலோ கட்சியின் நீண்ட கால உறுப்பினராகவும், வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினராகவும் இருந்த விந்தன் கனகரட்ணம் கடந்த திங்கட்கிழமை இலங்கைத் தமிழரசுக் கட்சியில் இணைந்துகொண்டார். அவர் நேற்று யாழ்.ஊடக அமையத்தில் ஊடக சந்திப்பை நடத்தி தான் ரெலோவில் இருந்து விலகியமை மற்றும் தமிழரசில் இணைந்து கொண்டமைக்கான காரணத்தை வெளிப்படுத்தினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கடந்த 1989ஆம் ஆண்டு முதல் ரெலோ அமைப்பில் இணைந்து ஆயுதப் போராட்டத்திலும் அதன் பின்னரான அரசியல் போராட்டத்திலும் என 41 வருடங்கள் தொடர்ந்து அந்த அமைப்பில் பயணித்து வந்திருக்கின்றேன்.

ஆனால், நான் சார்ந்திருந்த ரெலோ கட்சியானது ஒரு சிலரின் சுயநலன்களுக்காக அரசியல் சோரம் போய் சொந்த மக்களுக்கே துரோகம் இழைத்து டீல் அரசியல் நோக்கி பயணிக்கத் தொடங்கி இருக்கின்றது.

குறிப்பாக கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழர் தரப்பில் இருந்து ஒருவரை பொது வேட்பாளராக நிறுத்திய அவருக்கே எமது கட்சி ஆதரவை வழங்கியது. ஆனால், உண்மையில் ஒரு சிலரின் டீல் அரசியலால் அரசுக்குச் சோரம் போய் பொது வேட்பாளருக்குத்

07

# தேர்தலின் பின்னரே எந்தக் கட்சியுடன் இணைவது என்பது தொடர்பில் முடிவு

## தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் விக்கி தெரிவிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

”எங்களுடைய தனித்துவத்தை இல்லாமலாக்கும் முயற்சியில் பிற கட்சிகள் செயற்பட்டமையினாலேயே இம்முறை உள்ளூராட்சி சபைத் தேர்தலில் எங்களது கட்சி (தமிழ் மக்கள் கூட்டணி) தனித்துப் போட்டியிடுவதற்குத் தீர்மானித்துள்ளது.”

– இவ்வாறு தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும், தேர்தல் முடிவடைந்ததன் பின்னர் எந்தக் கட்சியுடன் இணைவது என்பது தொடர்பில் ஆராய்ந்து தீர்மானம் எடுக்கப்படும் என்றும் அவர் மேலும் கூறினார்.




## தமிழரசு...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி...)

துரோகம் செய்தது. அதாவது ரணிலை ஜனாதிபதியாக்கும் நோக்குடன் ரணிலுக்கு மறைமுக ஆதரவு கொடுத்தது. அதற்கு கையூட்டாக இவர்கள் என்னத்தைப் பெற்றுக்கொண்டார்கள் என்ற ஆவணம் என் கையில் இருக்கின்றது.

இதற்கு முதல் 2023 இல் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவினால் ஜனாதிபதியாக ரணிலை நிறுத்தியபோது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு டலஸை ஆதரிப்பது என முடிவு எடுக்கப்பட்டது. ஆனால், இந்த முடிவையும் மீறி டீல் அரசியல் காரணமாக மறைமுகமாக ரணிலை ஆதரித்து வாக்களித்தனர்.

இத்தகைய டீல் அரசியலைச் செய்தவர் வேறு யாருமல்ல. எமது கட்சியில் இருக்கின்ற ஒருவர்தான். அவர் ஒரு போலித் தேசியவாதி. அவர் கொழும்பில் பாரிய மோசடி செய்தவர். அதுமட்டுமல்லாது பின்கதவு அரசியல் செய்வதில் வல்லவர். யுத்தம் முடியும் வரை மறைந்திருந்து அதன் பின்னர் வந்து அரசியல் டீல் செய்யும் எட்டப்பன்.

அவ்வாறான ஒருவர்தான் ரணிலுக்கு ஆதரவாக வாக்களிக்க டீல் செய்து ஒருவருக்கு பத்துக் கோடி ரூபா பேரம் பேசி அந்தப் பணத்தைப் பெற்றுக்கொண்டு ரணிலுக்கான ஆதரவைப் பெற்றுக்கொண்டார்.

இதனைத் தொடர்ந்து கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது கூட கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த வினோ நோகராதலிங்கத்தின் பெயரைக் கூறி அந்த டீல் அரசியல் செய்யும் எட்டப்பன் இரண்டு கோடி ரூபாவைச் சுருட்டிக் கொண்டார்.

இதன் பின்னர் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலின்போது கூட எமது கட்சிக்கு வழங்கப்பட்ட ஆசனம் கூட பணத்துக்காக விற்கப்பட்டது என்று அறிகின்றோம்.

இதுபோன்று நண்பர் ஒருவருக்கு பார் லைசன்ஸ் கேட்டு அதனையும் பெற்றுக்கொண்டு அதையும் 7 கோடி ரூபாவுக்கு அவர் விற்றிருக்கின்றார். இந்த லைசன்ஸ் வழங்க உதவியவர் தனக்கும் அவர் துரோகம் இழைத்துள்ளார் என்று என்னுடன் மட்டுமல்ல நான் சார்ந்திருந்த அந்தக் கட்சியின் மிக முக்கியஸ்தர்கள் பலருடனும் அழுது புலம்பியுள்ளார்.

இவ்வாறு வினோவின் பெயரைப் பயன்படுத்தி 2 கோடி ரூபாவும், பார் லைசன்ஸ் என்று கூறி 8 கோடி ரூபாவும், அதே போன்று ரணுலுக்கு ஆதரவு எனப் பல கோடி ரூபாவையும் அவர் பெற்றுக்கொண்டிருக்கின்றார்.

இத்தகைய மோசடிகள் தொடர்பில் வினோவும் பார் லைசன்ஸ் காரரும் என்னுடனும் கட்சி சார்ந்த ஏனைய பலருடனும் தொலைபேசிகளில் கதைத்திருக்கின்றார்கள்.

இவ்வாறாக பின்கதவு அரசியல் டீலராகப் பல கோடி ரூபாக்களை ஏமாற்றிப் பெற்றுக்கொண்டு தமிழினத்திற்கு எதிராகச் செய்த துரோகத்தனங்களை அவரால் மறுதலிக்க முடியுமா?

இவ்வாறாக தரகர் அரசியல் செய்து பல கோடி ரூபாக்களை ஆட்டையைப் போட்டதை அறிந்தும் தெரிந்தும் நடவடிக்கை எடுக்காமல் அதற்கு உடந்தையாகவே தலையாட்டிகள் போன்று கட்சித் தலைமை இருக்கின்றது.

தமிழ் மக்களை ஏமாற்றி மோசடி செய்து மண்ணையும் மக்களையும் விற்றுப் பிழைக்கும் ஈனப்பிறவிகள் அல்லது தமிழினத் துரோகிகளை விரட்டியடிக்க வேண்டும். ஆக மொத்தத்தில் இவர்களைப் போன்று வடக்கு, கிழக்கில் உள்ள போலித் தேசியவாதிகளை தேர்தல்களில் தோற்கடித்து விரட்ட வேண்டும்.

இவை மட்டுமல்ல 1983 ஆம் ஆண்டு கலவரத்தில் ப ஆயிரக்கணக்கான மக்களைக் கொன்றொழித்த கட்சி ஜே.வி.பி.தான். அதன் பின்னர் ஒன்றாக இருந்த வடக்கு, கிழக்கையும் கூட இரண்டாகப் பிரித்த கட்சியும் இந்த ஜே.வி.பி.தான். ஆனால், இந்தக் கட்சியின் பட்ஜட்டுக்கே தமிழ்த் தேசியம் பேசும் எம். பி. ஒருவரும் வாக்களித்துள்ளார்.

உண்மையில் இந்த ஜே.வி.பி. அரசியல் கைதிகளை விடுவித்தார்களா? காணாமல்போனவர்களுக்கு என்ன செய்தார்கள்? பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கினார்களா? காணியை விடுவித்தார்களா? அரசியல் தீர்வைத் தருவோம் எனக் கூறினார்களா?

இப்படி தமிழ் மக்களின் எந்தவொரு பிரச்சினைக்கும் தீர்வை வழங்காத அதுவும் தமிழ் மக்களுக்கு எதிராகச் செயற்படுகின்ற இந்த அரசுக்கு ஆதரவாக ஏன் வாக்களிக்க வேண்டும்? ஆனாலும் ஒருவர் வாக்களித்துள்ளார் என்றால் அது எவ்வளவு பெரிய வெட்கக்கேடானது.

குறிப்பாக தமிழீழம் கேட்டோம். அதன்பின்னர் சமஷ்டி கேட்டோம். ஆனால் இப்போது வடக்குக்கு நிதி ஒதுக்கினாலே போதும் என்ற மிக மோசமான நிலையில் நாம் இருக்கின்றோம். வடக்குக்கு நிதி ஒதுக்கீடு வந்ததற்காக வாக்களிப்பது மிகவும் கேவலமானது.

இவ்வாறு நான் சார்ந்திருந்த கட்சியின் பல்வேறு நடவடிக்கைகளில் எனக்கு உடன்பாடில்லை. அதனை எமது மக்களும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்பதுடன் இவை எலலாம் எமது மக்களுக்கு விரோதமானவையாகவே இருக்கின்றது.

இதனாலேயே மக்களுக்காக நான் தமிழரசுக் கட்சியில் இணைந்து கொண்டுள்ளேன். ஆனால், இந்தக் கட்சியிலும் சில குறைகள், பிரச்சினைகள் இருந்தாலும் அதனைச் சீர் செய்து தொடர்ந்து தமிழரசுடனேயே பயணிப்பேன். தமிழரசு வீறுநடை போட வேண்டும்.

மேலும் இந்த அரசு இப்போது பட்டலந்த வதை முகாம் பற்றி பேச ஆரம்பித்துள்ளது. அதற்கு நடவடிக்கை எடுப்பதில் எமக்கு எந்தப் பிரச்சினையும் இல்லலை.

ஆனால், இந்த ஜனாதிபதி அனைத்து இன மக்களையும் சமமாகப் பார்க்கின்றார் என்றால் அல்லது முழு நாட்டுக்கும் ஜனாதிபதி என்றால் தமிழ் மக்களுக்கு நடந்தவற்றுக்கும் நீதி, நியாயம் வழங்க வேண்டும். அதற்கு அவர் தயாரா? எனக் கேட்கின்றோம்.

பட்டலந்த விவகாரத்தை இப்போது பேசுவது தேர்தல் நாடகம். தமிழ் மக்களுக்கு எதிராக கடந்த பல வருடங்களாக இடம்பெற்ற முள்ளிவாய்க்கால் படுகொலை உள்ளிட்ட அத்தனை படுகொலைகளுக்கும் நீதி விசாரணை வேண்டும்.” – என்றார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## போதை எனும் பேரழிவு

இலங்கையை அச்சுறுத்தும் போதைப் பொருள் பாவனை தற்பொழுது இளைஞர்கள் மத்தியில் வேகமாக அதிகரித்து வருகின்றது.

இளைஞர்கள் போதைப்பொருள்களுக்கு அடிமையாகும் பிரச்சினை தீவிரமாகி வருகின்றமை குறித்து ஆபத்தான மருந்துகள் கட்டுப்பாடு தொடர்பான தேசிய வாரியம் கவலை தெரிவித்துள்ளது.

பொதுவான சிகிச்சைக்கான மருந்துகளின் பயன்பாடு அதிகரித்து வருவதாகவும், அத்தகைய 150 வகையான மருந்துகள்சட்டவிரோதப்போதைப்பொருள்களுக்கு மாற்றாக பயன்படுத்தப்படுகின்றன எனவும் வைத்திய நிபுணர் டாக்டர் இந்திகா வன்னிநாயக்க கூறுகின்றார்

புற்றுநோய் நோயாளிகளுக்கு பரிந்துரைக்கப்படும் வலி நிவாரணிகள் மற்றும் பிற மருத்துவப் பொருள்கள் போன்றவை போதைக்கு அடிமையானவர்களால் அதிகளவில் தவறாக - போதை தரும் மாற்றுப் பொருள்களாக - பயன்படுத்தப்படுகின்றன.

போதைப்பொருள் நெருக்கடிக்கு பெரியவர்களுக்கு மட்டுமல்ல, கணிசமான எண்ணிக்கையிலான பள்ளிச் சிறார்கள் மற்றும் இளைஞர்கள் உள்ளாகின்றனர். குறிப்பாக 15 முதல் 17 வயதுடையவர்கள், போதைப்பொருள் துஷ்பிரயோகத்திற்கு பலியாகின்றனர் என்று டாக்டர் வன்னிநாயக்க மேலும் வலியுறுத்தினார்.

2024 ஆம் ஆண்டில், போதைப் பொருள் தொடர்பான குற்றங்களில் ஈடுபட்ட 162,000 நபர்களை அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

2019ஆம் ஆண்டு நடத்தப்பட்ட ஒரு கணக்கெடுப்பில், நாட்டில் 92,000 முதல் 100,000 வரை போதைக்கு முழுமையாக அடிமையானவர்கள் இருப்பதும், மூன்றரை லட்சம் நபர்கள் ஹெராயினுக்கும், மேலும் மூன்றரை லட்சம் பேர் கஞ்சாவுக்கும் அடிமையானவர்கள் என்றும் திடுக்கிடும் தகவல் தெரியவந்துள்ளது.

இந்தப் பின்புலத்தில், ஆபத்தான மருந்துகள் கட்டுப்பாடு தொடர்பான தேசிய வாரியம் இந்த ஆண்டு இறுதியில் போதைப்பொருளுக்கு அடிமையாதல் குறித்து ஒரு புதிய கணக்கெடுப்பை நடத்தத் தயாராகி வருவதாக டாக்டர் வன்னிநாயக்க கூறினார். அது மேலும் எத்தகைய அதிர்ச்சியான புள்ளிவிவரத்தை வெளிப்படுத்துமோ தெரியவில்லை.

போதை மற்றும் குடிப்பழக்கம் தொடர்ந்து அந்தப் போதை நிலையைப் பேணுவதற்காக அந்தப் போதைப் பொருளை அல்லது மதுவைப் பயன்படுத்தத் தூண்டுகிறது. அதற்கு அடிமையாவோரை அது நோய்வாய்ப்படுத்துகிறது. சீரழிக்கின்றது. இது நரம்புகளை பலவீனப்படுத்துகிறது. மனிதன் வெறுத்து ஒதுக்கவேண்டியவற்றுள்மிகமுக்கியமான ஒன்று போதைப் பழக்கம் ஆகும்.

போதைப் பொருள்களால் தனி மனித வாழ்வு சீரழிவதோடு நாட்டின் மற்றும் வீட்டின் பொருளாதாரமும் சீர்குலைகிறது. அமைதி, சுகவாழ்வு, சமூக இணக்கம் போன்றவை குலைகின்றன. மூளையை மழுங்கச் செய்து, புத்தியைத் தடுமாறச் செய்யும் ஒரு வித கிறக்கமே போதை. இந்தப் போதையில் ஒருவித சுகம் கிடைப்பதாகச் சிலர் எண்ணுகின்றனர். ஆனால், உண்மையில் இவர்கள் விளக்கில் விழும் வீட்டில் பூச்சிகளாய் வாழ்வைத் தொலைக்கின்றனர். உண்மையில் போதை தருவதாக நினைக்கும் அற்ப சுகம் பெரும் அழிவுக்குக் கொண்டு செல்வதை அவர்கள் உணர்வதில்லை.

கடுமையான கண்காணிப்பின் மூலம் போதைப் பொருள் கடத்துபவர்களையும் விநியோகிப்பவர்களையும் கண்டறிய வேண்டும். போதைப் பொருளின் மூலத்தைக் கண்டறிந்து அதனை முளையிலேயே கிள்ளி எறிவதில் விழிப்புடன் செயல்பட வேண்டும். உபயோகிப்பவரும் உற்பத்தியாளரும் விநியோகஸ்தரும் குற்றவாளிகள்தாம். ஆனாலும் முதல் குற்றவாளி உற்பத்தியாளரும் விநியோகஸ்தரும் என்பதை நாம் மறுக்க முடியாது.






# நகர அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரிகளுக்கும் ஜனாதிபதி அநுரகுமாரவுக்கும் இடையில் சந்திப்பு

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிற்கும் நகர அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரிகளுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது.

நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் செயல்படுத்தப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் இந்த ஆண்டு வரவு -செலவுத் திட்டத்தில் அந்த நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதியை முன்னுரிமை வழங்கவேண்டிய திட்டங்களை அடையாளம் கண்டு திறம்பட பயன்படுத்துவது தொடர்பில் ஆராயும் நோக்கத்துடன் இந்தக் கலந்துரையாடல் ஏற்பாடு செய்யபட்டது.

முறையான நகர்ப்புற அபிவிருத்தியின் மூலம் நாட்டின் தேசிய பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கான சாத்தியத்தை சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, நகர அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரித்து செயல்படுத்தும் போது பொருளாதார, சமூக, சுற்றுச்சூழல் மற்றும் பௌதீக அடிப்படையில் ஒருங்கிணைந்த திட்டங்களை தயாரிப்பதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

நகர திட்டங்களை ஒன்லைனில் அங்கீகரிப்பதற்கான திட்டங்கள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருவதோடு அதற்காக தொடர்புடைய நிறுவனங்களை ஒருங்கிணைப்பதன் முக்கியத்துவம் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

நாடு முழுவதும் 119 நகரங்களுக்கான நகர அபிவிருத்தித் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதோடு அந்தத் திட்டங்களை விரைவாக செயல்படுத்துவது மற்றும் எழுந்துள்ள பிரச்சினைகள் குறித்தும் இதன் போது விரிவாக ஆராயப்பட்டது.

நகர திட்டமிடல், மூலதன முதலீடுகள், அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட திட்டங்களை செயல்படுத்துதல், நகர காணிப் பயன்பாட்டுக் கொள்கையை தயாரித்து செயல்படுத்துதல், புதிய அபிவிருத்தித் திட்டங்களுக்கான ஒப்பந்தங்களை மேற்கொள்ளுதல், நிறைவு செய்வதற்குத் தவறியதால் புறக்கணிக்கப்பட்ட எந்தவொரு அபிவிருத்திபணியையும் பொறுப்பேற்று நிறைவு செய்தல், மூலதன அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரித்தல், சுற்றுச்சூழல் தரநிலைகளைத் தயாரித்தல் மற்றும் சுற்றுச்சூழல் அபிவிருத்தி நடவடிக்கைகளைத் தயாரித்தல், கட்டிட பொறியியல் மற்றும் ஏனைய செயல்பாடுகளை மேற்கொள்வது மற்றும் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் போன்ற நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்பு மற்றும் செயல்பாடுகள் தொடர்பாகவும் இதன் போது மீளாய்வு செய்யப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் நகர அபிவிருத்தி, நிர்மாணத் துறை மற்றும் வீடமைப்பு அமைச்சர் அநுர கருணாதிலக, ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிகச் செயலாளர் ரஸல் அபொன்சு, நகர அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவர் பொறியியலாளர் எல்.பி. குமுது லால் மற்றும் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.















# அஸ்வெசும திட்டத்தின் நடைமுறையாக்கத்தில் வடக்கு மாகாணமே சிறப்பாகச் செயற்படுகின்றது

## ஆளுநர் முன்னிலையில் நலன்புரி நன்மைகள் சபையின் ஆணையாளர் பாராட்டு

“1924” என்ற ஹொட்லைன் இலக்கத்துக்கு வேலை நாட்களில் காலை 8.30 மணியிலிருந்து மாலை 4.30 மணிவரையில் தொடர்பு கொள்வதன் ஊடாக நலன்புரி நன்மைகள் சபையின் ஊடான அஸ்வெசும தொடர்பான முறைப்பாடுகளை எவரும் முன்வைத்தால் தீர்வுகளை மேற்கொள்ள முடியும் என நலன்புரி நன்மைகள் சபையின் ஆணையாளரும் சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் தலைவருமான ஜயந்த விஜயரட்ண தெரிவித்தார்.

அத்துடன் அஸ்வெசும திட்டத்தின் நடைமுறையாக்கத்தில் ஏனைய மாகாணங்களை விட வடக்கு மாகாணமே சிறப்பாகச் செயற்படுகின்றது எனவும் அவர் பாராட்டினார்.

வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில், வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையில், வடக்கு மாகாணத்தின் அனைத்து மாவட்டச் செயலர்கள், அனைத்துப் பிரதேச செயலர்களுடனான விசேட கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இதில் நலன்புரி நன்மைகள் சபையின் ஆணையாளர், பிரதித் திட்டப் பணிப்பாளர் எஸ்.யு.சந்திரகுமாரன் ஆகியோரும் பங்கேற்றனர்.

ஆளுநர் தனது உரையில், ”அஸ்வெசும திட்டம் தொடர்பில் மக்கள் பல பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். வறுமை நிலையிலுள்ள பலர் இந்தத் திட்டத்துக்குள் உள்வாங்கப்படவில்லை. அதேநேரம் வசதி வாய்ப்புள்ள சிலரும் இதில் உள்ளெடுக்கப்பட்டுள்ளனர். பாதிக்கப்பட்ட மக்கள் என்னிடம் தினமும் முறையிடுகின்றனர். இந்தப் பிரச்சினைகளை விரைவாகத் தீர்க்கவேண்டும்.” – என்றார்.

இதன் பின்னர் கருத்துத் தெரிவித்த பிரதித் திட்டப் பணிப்பாளர் எஸ்.யு.சந்திரகுமாரன், ”ஆளுநர் இங்குள்ள மக்களின் பிரச்சினை தொடர்பில் எம்முடன் மூன்று மாதங்களுக்கு முன்னரே கலந்துரையாடியிருந்தார். இங்கு எம்மை வருமாறு அழைத்திருந்தார்கள். இங்குள்ள பிரச்சினைகளை விரைந்து தீர்க்குமாறும் அவர் கோரியிருந்தார். அதற்கு அமைவாக நாங்கள் இங்கு வந்துள்ளோம். ஆளுநர் குறிப்பிட்டுள்ள மனுக்களை மீளாய்வு செய்வதற்குத் திட்டமிட்டுள்ளோம். அதனை எதிர்வரும் ஜூன் மாதத்துக்குள் நிறைவு செய்வதற்கு எதிர்பார்கின்றோம்.” – என்று குறிப்பிட்டார்.

இதனைத் தொடர்ந்து நடைபெற்ற கலந்துரையாடலில், ஒவ்வொரு மாவட்டங்களினதும் மாவட்டச் செயலாளர்கள், பிரதேச செயலர்கள் பல்வேறு விடயங்களைச் சுட்டிக்காட்டினர். அஸ்வெசும திட்டத்தை நடைமுறைப்படுத்தும்போது எதிர்கொள்ளும் சவால்கள் தொடர்பாகவும் தெரியப்படுத்தினர். வடக்கு மாகாணத்தில் மாத்திரம் உள்ள விசேட சிக்கல் நிலைமைகளையும் எடுத்துக் கூறினர்.

இதன்போது எதிர்காலத்தில் சில விடயங்களில் “முறைமையில்” மாற்றங்களை ஏற்படுத்தவும், முன்வைக்கப்பட்ட கொள்கை ரீதியான பிரச்சினைகள் தொடர்பில் கொழும்பில் மீண்டும் ஆராய்வதற்கும் பிரதித் திட்டப் பணிப்பாளர் இணங்கினார்.






# இரு எரிபொருள் நிரிப்பு நிலையங்களை பெற்றுக்கொள்ளவில்லை: காதர் மஸ்தான்

"நான் அரசியலுக்கு வந்த பின்னர் இரண்டு எரிபொருள் நிரிப்பு நிலையங்களை பெற்றுக்கொண்டிருப்பதாக வெளிவிவகார பிரதி அமைச்சர் தெரிவித்த கூற்றில் எந்த உண்மையும் இல்லை. அதிகாரிகள் எழுதித்தருவதையெல்ல தேடிப் பார்க்காமல் சிறுபிள்ளைத்தனமான வெளியிடுவதை அவர் தவிர்த்துக்கொள்ள வேண்டும்."

– இவ்வாறு என எதிர்க்கட்சி உறுப்பினர் காதர் மஸ்தான் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற 2025 வரவு செலவுத் திட்டத்தின் கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நான் வெளிநாட்டுக்கு சென்றிருந்ததால் கடந்த சில நாட்களாக இந்த சபைக்கு வரமுடியாமல் போனது. அந்த காலப்பகுதியில் வெளிவ்வகார பிரதி அமைச்சர் அருன் ஹேமச்சந்திரா இந்த சபையில் எரிபொருள் நிரப்பு நிலையங்களை வைத்திருப்பவர்களின் பெயர் பட்டியல் ஒன்றை வெளியிட்டிருந்தார். அதில் எனக்கும் எனது குடும்பத்தனருக்கும் இரண்டு எரிபொருள் நிரப்பு நிலையங்கள் இருப்பதாகவும் அது அரசியல் செல்வாக்கில் பெற்றுக்கொண்டவை என்ற வகையிலே இந்த சபைக்கு அறிவித்திருந்தார்.

நான் அரசியலுக்கு வர முன்னரே மஸ்தான் ட்ரேடர்ஸ் மற்றும் எம்.எஸ் இன்டபிரைசஸ் என்ற எரிபொருள் நிரப்பு நிலையங்கள் எங்களுக்கு இருந்து வருகின்றன. ஆனால் இதனை நான் அரசியலுக்கு வந்த பின்னர் பெற்றுக்கொண்டதாக பொய்யான அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கிறார். இவ்வாறு சிறுபிள்ளைத்தனமாக சேறுபூசும் நடவடிக்கைகளில் அவர் ஈடுபடக்கூடாது. ஒருவர் பற்றி ஒரு தகவலை தெரிவிக்கும்போது அதன் உண்மைதன்மை தொடர்பில் தேடிப்பார்த்து தெரிவிக்க வேண்டும். அவ்வாறு இல்லாமல் அதிகாரிகள் எழுதித்தருவதை அவ்வாறே வாசிக்கக்கூடாது.

இந்த அரசாங்கம் மீதும் ஜனாதிபதி மீதும் நான் பெரும் நம்பிக்கை வைத்திருக்கிறேன். ஊழலற்ற அரசியலை செய்வார்கள் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கிறது. அதனால் இவ்வாறு சேறுபூசும் அரசியலை செய்யக்கூடாது. நானும் எனது குடும்பமும் வர்த்தகம் சார்ந்தவர்கள். நான் அரசியலுக்கு வந்த பின்னர் முழுநேர அரசியலில் ஈடுபட்டு வருகிறேன். அதனால் எனது சகோதரர்கள் தற்போது அந்த வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். அதனால் நான் அரசியலுக்கு வந்த பின்னர் எரிபொருள் நிரப்பு நிலையங்களை பெற்றுக்கொண்டதாக தெரிவிக்கப்பட்ட விடயத்தை முற்றாக மறுக்கிறேன்." என்றார்.







# ஹட்டனில் இலஞ்சம் பெற்ற பொலிஸ் சார்ஜன்ட் கைது!

இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் ஹட்டன் பொலிஸ் நிலையத்தின் சார்ஜன்ட் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அங்கொடை பகுதியைச் சேர்ந்த ஒருவர் வழங்கிய முறைப்பாட்டைத் தொடர்ந்து இந்தக் கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

ஹட்டன் நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டிருந்த நிலையில், முறைப்பாட்டாளரையும் அவரது மனைவியையும் விடுவிப்பதற்கும், வழக்கை முடிவுக்குக் கொண்டுவர தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கும், சம்பந்தப்பட்ட சார்ஜன்ட் ஒரு தொகைப் பணத்தை இலஞ்சமாகக் கோரியுள்ளார்.

மேற்படி சார்ஜன்ட் ஹட்டன் நீதிவான் நீதிமன்றத்தில் வைத்து, இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு விசாரணை



ஆணைக்குழுவின் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபரை எதிர்வரும் 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

# தபால் மூல வாக்களிப்புக்கான விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் கால அவகாசம் நீடிப்பு




2025 ஆம் ஆண்டுக்கான உள்ளூராட்சி சபைத் தேர்தலின் தபால் மூல வாக்களிப்புக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கால அவகாசம் நீடிக்கப்பட்டுள்ளது என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தபால் மூலம் வாக்களிக்க விரும்பும் அரச ஊழியர்களின் விண்ணப்பங்கள் மார்ச் 3 ஆம் திகதி முதல் 12 ஆம் திகதி நள்ளிரவு 12 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

குறித்த விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்படும் தபால்களில் ஏற்படக்கூடிய காலதாமதங்களையும் தேர்தல் ஆணைக்குழுவுக்கு விடுக்கப்பட்ட கோரிக்கைகளையும் கருத்தில் கொண்டு தபால் மூல வாக்களிப்புக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் காலம் எதிர்வரும் 17 ஆம் திகதி நள்ளிரவு 12 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இந்தக் காலதாமதங்களைத் தவிர்ப்பதற்கு தபால் மூல வாக்களிப்புக்கான விண்ணப்பங்களை ஒவ்வொரு மாவட்ட வாரியாக வேறு பிரித்து வெவ்வேறு கடித உறைகளில் மாவட்ட தேர்தல் அலுவலகத்துக்கு நேரில் சென்று ஒப்படைப்பது மிகவும் உகந்தது என்றும் தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

# முன்னாள் மேல் மாகாண சபை உறுப்பினர் சஞ்சய சிறிவர்தனவுக்குத் தடுப்புக் காவல்

காணியில் புதைக்கப்பட்டிருந்த துப்பாக்கியைக் கண்டெடுத்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட மேல் மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் சஞ்சய் சிறிவர்தனவைத் தடுப்புக் காவலில் வைத்து விசாரணை நடத்த நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

அவர் நேற்று அத்தனகல்ல நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

அத்தனகல்ல - வெலிகடமுல்லை - பெத்தியகந்த பகுதியில் சந்தேகநபருக்குச் சொந்தமான தென்னந்தோப்பு நிலத்தில் இருந்து ரி - 56 ரக துப்பாக்கி ஒன்றும், 2 மகசின்கள், 130 தோட்டாக்கள், 12 போர் துப்பாக்கி மற்றும் 6 தோட்டாக்கள் நேற்றுமுன்தினம் கண்டெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.






# வவுனியா மாவட்டத்தில் போட்டியிடக் கட்டுப்பணம் செலுத்தியது ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி

(கி.வசந்தன்)

வவுனியா மாநகர சபை உள்ளிட்ட நான்கு சபைகளிலும் போட்டியிட ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி நேற்று வவுனியா மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலகத்தில் கட்டுப்பணம் செலுத்தியது.

நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடும் கட்சிகள் எதிர்வரும் 19 ஆம் திகதி வரை கட்டுப்பணம் செலுத்த முடியும்.

அதற்கமைவாக, வவுனியா மாவட்டத்தின் வவுனியா மாநகர சபை, வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை, வவுனியா வடக்கு பிரதேச சபை, வெண்கல செட்டிகுளம் பிரதேச சபை ஆகிய நான்கு உள்ளூராட்சி சபைகளிலும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி சங்கு சின்னத்தில் போட்டியிடவுள்ளது.

அதற்கான கட்டுப்பணத்தைக் கட்சியின் மாவட்ட இணைப்பாளர் செ.மயூரன், புளொட் கட்சியின் மாவட்ட அமைப்பாளர் சந்திரகுலசிங்கம், ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியின் முக்கியஸ்தர் மோசஸ், ரெலோ அமைப்பின் மாவட்ட அமைப்பாளர் சந்திரபத்மன் உள்ளடங்கிய கட்சி உறுப்பினர்கள் கட்டுப்பணத்தை நேற்று செலுத்தினர்.



# மோட்டார் சைக்கிள் விபத்தில் காயமடைந்த வயோதிபர் சிகிச்சை பலனின்றி உயிரிழப்பு

பாண் விற்பனை செய்யும் மோட்டார் சைக்கிள் மோதியதில் காயமடைந்த வயோதிபர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

7 ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பு பகுதியைச் சேர்ந்த சௌந்தரநாயகம் பெனாட் (வயது 73) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்த 8 ஆம் திகதி வீட்டிற்கு செல்வதற்காக வீதியோரமாக நின்றிருந்த போது, பாண் விற்பனை செய்யும் பெட்டியை ஏற்றி வந்த மோட்டார் சைக்கிள் அவர் மீது மோதியுள்ளார்.

பாண் பெட்டியில் மோதுண்ட வநோதிபர் வீதியோரத்தில் இழுபட்டு காயங்களுக்கு உள்ளான நிலையில். இரவு 7.30 மணியளவில் புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக முல்லைத்தீவு மாஞ்சோலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

மறுநாள் 9ஆம் திகதி மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்தவர் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பாக புதுக்குடியிருப்பு பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

மரணம் தொடர்பிலான விசாரணைகளை யாழ். போதனா வைத்தியசாலை திடீர்மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் மேற்கொண்டிருந்தார்.

சடலம் இறவினர்களிடம் நேற்று முன்தினம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.





# வாள்வெட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய மூன்று நபர்கள் வாள்களுடன் யாழில் கைது

யாழில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய மூன்று பேரைக் கைது செய்துள்ள பொலிஸார் அவர்களிடமிருந்து பயங்கரமான ஆயுதங்களையும் மீட்டுள்ளனர்.

கொக்குவில் ஞானபண்டிதா பாடசாலைக்கு அருகாமையில் கடந்தவாரம் இடம்பெற்ற வாள் வெட்டில் ஒருவருடைய கைவிரல் வெட்டி விழுத்தப்பட்டிருந்தது.

இச் சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர்கள் தொடர்பில் யாழ் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கீழ் இயங்கும் மாவட்ட பொலிஸ் புலனாய்வு பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்து வந்தனர்.

இதற்கமைய சந்தேக நபர்கள் மறைந்திருக்கும் இடங்கள் தொடர்பில் கிடைக்கப் பெற்ற தறவலின் அடிபடையில் குற்றதடுப்பு பிரிவின் பொறுப்பதிகாரி கெலும்பண்டார தலைமையிலான சுற்றி வளைப்பில் இருவரைக் கைது செய்ததுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களிடம் மேற்கொண்ட விசாரணைகளின் போது அவர்களிடமிருந்து வாள்கள் மற்றும் ஹெரோயின் போதைப் பொருள் கைப்பற்றபட்டன.

இதனைத் தொடர்ந்து மற்றொரு சந்தேக நபர் சட்டதரணியூடாக சரணடைந்துள்ளார். இவர்களிடமிருந்தும் வாள்களும் மோட்டார் சைக்கிளும் மீடகப்பட்டுள்ளது.

# ஆட்டுக்கு புல் அறுக்க சென்றவர் சடலமாக மீட்பு



**(பொகவந்தலாவ எஸ்.சதீஸ்)**

பொகவந்தலாவ லெச்சுமிதோட்டம் மத்திய பிரிவு பத்தாம் இலக்க தேயிலை மலைக்கு அருகாமையில் உள்ள கால்வாய் ஒன்றில் இருந்து ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக பொகவந்தலாவ பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சடலம் நேற்று முன்தினம் செவ்வாய்கிழமை இரவு மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இந்த நபர் நேற்று முன்தினம் காலை ஆட்டுக்குப் புல் அறுக்க சென்றவர் இரவு ஏழு மணி வரை வீடு திரும்பவில்லை. தோட்ட பொதுமக்கள் இணைந்து தேடும் நடவடிக்கையில் ஈடுபட்ட போது கால்வாய் ஒன்றில் விழுந்து கிடப்பதைக் கண்டு பொதுமக்கள் அது குறித்து பொகவந்தலாவ பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளனர்.

சம்பவ இடத்திற்கு வருகை தந்த பொலிஸார் விசாரனைகளை ஆரம்பித்தனர். தடவியல் பொலிஸாரும் சம்பவ இடத்திற்கு வரவழைக்கப்பட்டனர்.

சடலமாக மீட்கப்பட்ட நபர் பொகவந்தலாவ லெட்சுமி தோட்டம் மத்திய பிரிவை சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான 57வயதுடைய சிவனுபாக்கியநாதன் என பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது .

சடலம் சட்டவைத்திய அதிகாரியின் பிரேத பரிசோதனைக்காக டிக்கோயா கிழங்கின் ஆதார வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை பொகவந்தலாவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.







# முன்னேஸ்வரம் இரதோற்சவம் நேற்று

**(உடப்பு க.மகாதேவன்)**


வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த பஞ்ச ஈஸ்வரங்களில் ஒன்றான சிலாபம், முன்னேஸ்வரம் ஸ்ரீ வடிவாம்பிகா சமேத ஸ்ரீ முன்னைநாதஸ்சுவாமி ஆலயத்தின் வருடாந்த பிரமோற்சவத்தில் இரதோற்சவம் நேற்று புதன்கிழமை நடைபெற்றது.

எம்பெருமான் பக்தர்களின் அரோ ஹரா கோஷம் முழங்க உள்வீதி வலம் வந்து, பின்னர் இரதத்தில் எழுந்தருளினார்.அத்துடன் தீபாரணைகள் காட்டப்பட்டு,“அரோஹரா... அரோஹரா..” ஒலியுடன் இரதம் வீதியில் இழுக்கப்பட்டது.

இதன் போது,பெருந்திரலான பக்த அடியார்கள் கலந்து கொண்டு முன்னை நாத சுவாமியின் அருளைப் பெற்றுக் கொண்டனர்.







# மக்களின் காணிகளை அரச திணைக்களங்கள் திருடுகின்றன என ரவிகரன் எம்.பி. குற்றச்சாட்டு



**(விஜயரத்தினம் சரவணன்)**

முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் உள்ளிட்ட வன்னிப்பகுதிகளில், வனவளத் திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம் உள்ளிட்ட அரச திணைக்களங்கள் மக்களின் விவசாய மற்றும் குடியிருப்புக் காணிகளை அத்துமீறி திருடியுள்ளன என வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் நாடாளுமன்றில் குற்றச்சாட்ட முன்வைத்தார்.

அதேவேளை இவ்வாறு மக்களின் காணித்திருட்டில் ஈடுபடும் திணைக்களங்களில் ஒன்றான வனவளத் திணைக்களம் வன்னியில் இடம்பெறும் சட்டவிரோத காடழிப்புச் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தி, வனவளத்தைப் பாதுகாக்க நடவடிக்கை எடுப்பதில்லை எனவும் தெரிவித்தார்.

கடந்த 2009ஆம் இற்கு முன்பு மரக்குற்றிகளால் நிரப்பப்பட்ட கனரக வாகனங்களைக் கண்டதில்லை எனவும், மரம் அரிகின்ற இயந்திர வாள்களின் கொடூர ஓசையைக் கேட்டதில்லை எனவும் குறிப்பிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன், வனவளத்தை தமிழீழ விடுதலைப் புலிகள் பாதுகாத்தனர் எனவும் சுட்டிக்காட்டினார்.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற வரவு - செலவுத் திட்ட கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் மீதான குழுநிலை விவாதத்தில் பங்கேற்றுக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் -

முன்னைய ஆட்சியில் திணைக்களங்களால் காணித்திருட்டுக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தங்களுடைய ஆட்சியில் இவ்வாறான காணித் திருட்டுக்கள் நீக்கப்பட வேண்டும்.

வன்னிப் பெருநிலப்பரப்பு எப்போதும் காடுகளை அதிகமாகக்கொண்ட நிலப்புரப்பாகவே காணப்படுகின்றது. இங்குள்ள மக்களின் வாழ்வு தொன்றுதொட்டு இயற்கையோடு இணைந்த தொன்றாகவே காணப்படுகின்றது. இங்குள்ள மக்கள் என்றும் இயற்கையோடு முரண்பட்டு கொண்டவர்கள் அல்லர். காடுகளை அழித்ததில்லை. 2009 ஆம் ஆண்டுவரை வெட்டப்பட்ட மரக்குற்றிகளால் நிரப்பப்பட்ட கனரக வாகனங்கள் எம் வீதியால் சென்றதை நாம் கண்டதில்லை.

மரம் அரிகின்ற இயந்திர வாள்களின் கொடூர ஓசையை நாம் கேட்டதில்லை. 2009 ஆம் ஆண்டு வரை வனவளத் திணைக்களமும், வனஜீவராசிகள் திணைக்களமும், இங்கு எமது இடத்தில் இருக்கவில்லை. ஆனாலும் விடுதலைப் புலிகளின் வனவளப்பிரிவு இருந்தது. இயற்கையை நேசித்த வன்னியர்களின் வாழ்க்கைமுறை இருந்தது. இதனால் வனப்பகுதிகள் அழிக்கப்படவில்லை. காடுகள் அழிக்கப்பட்டு மரங்கள் வெட்டு மரங்களாகவும், விறகுத தேவைகளுக்காகவும் பெருநகரங்களை நோக்கி ஏற்றிச் செல்லப்படவில்லை. காடுகள் மிகவும் கவனமாக காவல் செய்யப்பட்டன.

கடந்த 2010ஆம் ஆண்டிலும் அதன் பின்னரும்தான் வனவளத்திணைக்களத்தினதும், வனஜீவராசிகள் திணைக்களத்தினதும், நிர்வாகம் இங்கு நிலைநிறுத்தப்பட்டது.

இதன் பின்னர்தான் வன்னிப் பெருநிலப் பரப்பின் காடுகள் குறையாடப்பட்டன.

மன்னாரில் முசலி உட்பட குறிப்பிட்ட சில இடங்களிலும், வவுனியாவில் பம்பைமடு உள்ளிட்ட சிலகுறிப்பிட்ட இடங்களிலும் அடர்காடுகள், ஒதுக்கப்பட்ட வனப்பகுதிகள் ஈவுஇரக்கமற்று கனகரக இயந்திரங்களால் மூர்க்கத்தனமாக சிதைக்கப்பட்டன. இவை வனவளத்திணைக்களத்தின் அபகரிப்புக்கள் அல்லது, திருட்டுக்களாகவே கருதப்படவேண்டும்.

google earth time Line ஊடாகப் பாருங்கள். 2009இன் முன்பு வன்னிப்பெருநிலப் பரப்பில் வனவளம் எவ்வாறு பாதுகாக்கப்பட்டது என்பதையும், 2009 இன் பின்பு வனப்பகுதிகள் எவ்வாறு சூறையாடப்பட்டன என்பதையும் அறியமுடியும்.

இன்றுவரைவனவளத்திணைக்களத்தின் செயல்பாடுகள் மிகவும் ஊழல் நிறைந்தனவாகவே காணப்படுகின்றன. இதேபோலத்தான் வனஜீவராசிகள் திணைக்களமும் இங்கு செயற்பட்டு வருகின்றது. இவ்வாறு வனப்பகுதிகள், இயற்கை வாழ்விடங்கள் என்பவை சூறையாடப்படுவதற்கு காரணமாக இருக்கும் இத்திருட்டுத் திணைக்களங்கள் 2010 இன் பின் எங்கள் வீட்டுமுற்றங்களையும் வயல் நிலங்களையும், தோட்டந் துரவுகளையும், ஏன் வீதிகளையும் இடுகாடுகள், சுடுகாடுகளையும்கூட திருடத்தொடங்கி விட்டார்கள்.

2009 ஆம் ஆண்டின் பின்னர் தற்போது நாட்டில் நடைமுறையில் உள்ள சட்டங்களையும், விதிகளையும் புறக்கணித்து மாவட்டச்செயலாளருக்கோ, பிரதேசச் செயலாளருக்கோ தெரியப்படுத்தாது, நிலஅளவைத் திணைக்களத்தின் ஊடாக வரைபடங்களையும் பெற்றுக்கொள்ளாமல், முல்லைத்தீவு மாவட்டத்தில் மட்டும் 167,487 ஏக்கர் நிலப்பரப்பு வனவளத் திணைக்களத்தால் வனப்பிரதேசமாக வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்டச் செயலக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

அவ்வறிக்கையின்படி 1983ஆம் ஆண்டுதொடக்கம் 2009ஆம் ஆண்டுவரை உள்நாட்டுப்போர் காரணமாக இடம்பெயர்ந்த மக்களின் குடியிருப்புக் காணிகள், முத்தையன் கட்டுக்குள நீர்ப்பாசனத்திட்டம், தண்ணிமுறிப்புக்குள நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் மக்களுக்கு பிரித்து வழங்கப்பட்ட வயல்நிலங்கள், இன்னும் கமநல அபிவிருத்தித் திணைக் களத்தின் நிர்வாகத்தின்கீழ் இருக்கும் நீர்ப்பாசனக் குளங்கள் மற்றும், அவற்றின்கீழ் இருக்கும் வயல்நிலங்கள் என்பன வனவளத்திணைக்களத்தால் விதிமுறைகளை மீறிய வர்த்தமானி அறிவித்தல்கள் மூலம் ஒதுக்கப்பட்ட வனவளப் பிரதேசங்களாக வர்த்தமானப்படுத்தப்பட்டு இருக்கின்றன என மாவட்ட புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

இதே போல் 2009ஆம் ஆண்டின் பின்னர் வனஜீவராசிகள் திணைக்களத்தால் முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேசச் செயலாளர் பிரிவில் 10,119 ஏக்கர் நிலப்பரப்பு நந்திக்கடல் இயற்கை வாழ்விடமாகவும், 10,925 ஏக்கர் நிலப்பரப்பு நாயாறு இயற்கை வாழ்விடமாகவும், சுண்டிக்குளம் தேசிய பூங்கா என புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பரிவிலும், சேர்த்து 48,357 ஏக்கர் பிரதேசத்தையுமாக மொத்தம் 69,401 ஏக்கர் பிரதேசத்தை வனஜீவராசிகள் திணைக்களம் தங்களுடைய ஆளுகைக்குள் கொண்டு வந்துள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட புள்ளிவிவரங்கள் சுட்டிக்காட்டுகின்றன - என்றார்.

# இந்தியா - மொரிஷியஸ் இடையே 8 ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின



இந்தியா - மொரிஷியஸ் இடையே 8 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி உள்ளன. அந்நாட்டின் மிக உயர்ந்த தேசிய விருதை பிரதமர் நரேந்திர மோடிக்கு, அந்நாட்டின் ஜனாதிபதி தரம்பீர் கோகுல் வழங்கினார்.

இரண்டு நாள் பயணமாக பிரதமர் நரேந்திர மோடி நேற்று முன்தினம் மொரிஷியஸ் சென்றார். பயணத்தின் இரண்டாம் நாளான நேற்று, அந்நாட்டின் முன்னாள் பிரதமர் பிரவிந்த் குமார் ஜக்நாத், எதிர்க்கட்சித் தலைவர் ஜார்ஜஸ் பியர் லெஸ்ஜோங்கார்ட் ஆகியோரைச் சந்தித்துப் பேசினார்.

இதனைத் தொடர்ந்து மொரிஷியஸ் பிரதமர் நவின்சந்திர ராம்கூலம் தலைமையிலான குழுவினருடன், பிரதமர் மோடி தலைமையிலான இந்திய குழு பேச்சுவார்த்தை நடத்தியது. இதையடுத்து பிரதமர் நரேந்திர மோடிக்கு மொரிஷியஸின் மிக உயரிய தேசிய விருதை, ஜனாதிபதி தரம்பீர் கோகுல் வழங்கினார்.

கனமழை பெய்து கொண்டிருந்த நிலையில், விருதைப் பெற்றுக்கொண்டு உரையாற்றிய பிரதமர் நரேந்திர மோடி, "மொரிஷியஸின் மிக உயரிய தேசிய விருதை பெற்றதில் நான் மிகவும் பெருமைப்படுகிறேன். இதற்காக நன்றியுள்ளவனாக இருக்கிறேன். இது எனக்கு மட்டுமல்ல, இந்தியாவின் 140 கோடி இந்திய மக்களுக்கும் கிடைத்த மரியாதை. இது இந்தியாவிற்கும் மொரீஷியஸுக்கும் இடையிலான பல நூற்றாண்டுகள் பழமையான கலாச்சார மற்றும் வரலாற்று உறவுக்கு ஒரு மரியாதை" என தெரிவித்தார்.

இரு தரப்புக்கும் இடையே நடைபெற்ற பேச்சுவார்த்தையில் 8 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைழுத்தாகின. இது குறித்து போர்ட் லூயிஸில் செய்தியாளர்களிடம் பேசிய இந்திய வெளியுறவுச் செயலாளர் விக்ரம் மிஸ்ரி, "8 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி உள்ளன. மொரிஷியஸில் புதிய நாடாளுமன்றக் கட்டிடம் கட்டுவதற்கு இந்தியாவின் ஆதரவை பிரதமர் மோடி அறிவித்தார்" என கூறினார்.

# 'தூங்கவிடாமல் துன்புறுத்தப்பட்டேன்'; தங்கக் கடத்தல் வழக்கில் கைதான நடிகை ரன்யா கண்ணீர் வாக்குமூலம்

தங்கக் கடத்தல் வழக்கில் கைது செய்யப்பட்ட நடிகை ரன்யா ராவ் தன்னை விசாரணை என்ற பெயரில் தூங்கவிடாமல் துன்புறுத்தினார்கள் எனவும் அவதூறாகப் பேசி மிரட்டினார்கள் என்றும் நீதிமன்றத்தில் கண்ணீர் விட்டு கதறியுள்ளார்.



கர்நாடக பொலிஸ் டி.ஜி.பி. ராமசந்திர ராவின் வளர்ப்பு மகளும், நடிகையுமான ரன்யா ராவ் (வயது 32) துபாயில் இருந்து 14.8 கிலோ தங்கம் கடத்தி வந்ததாக கடந்த 3 ஆம் திகதி பெங்களூர் விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டார். இதுகுறித்து வழக்குப்பதிவு செய்த வருவாய் புலனாய்வு இயக்குநரக அதிகாரிகள் அவரது வீட்டில் நடத்திய சோதனையில் 2.67 கோடி ரூபா ரொக்கப்பணமும், 2.06 கோடி ரூபா மதிப்பிலான தங்க நகைகளும் சிக்கின. இதையடுத்து அதிகாரிகள் அவரை மார்ச் 24 ஆம் திகதி வரை காவலில் எடுத்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில், விசாரணையின் போது தன்னை தூங்கவிடாமல் துன்புறுத்தினார்கள் எனவும் அவதூறான வார்த்தைகளை பிரயோகித்து, மிரட்டினார்கள் என்றும் ரன்யா தெரிவித்துள்ளார். பொருளாதார குற்றங்களுக்கான சிறப்பு நீதிமன்றத்தில் பிணை கோரி தாக்கல் செய்யப்பட்ட மனு விசாரணையின் போது ரன்யா இவ்வாறாக தெரிவித்துள்ளார்.

# ஹரியானா மாநகராட்சித் தேர்தலில் பா.ஜ.க. அமோக வெற்றி பெற்றது

ஹரியானா மாநிலத்தில் நடந்த மாநகராட்சித் தேர்தலில் பாரதிய ஜனதா கட்சி அமோக வெற்றியைப் பதிவு செய்துள்ளது. அங்குள்ள 10 மாநகராட்சிகளில், காங்கிரஸ் கட்சியின் பூபேந்திர ஹூடாவின் கோட்டையான ரோஹ்தக் உட்பட 9 இடங்களை பா.ஜ.க. கைப்பற்றியுள்ளது. மீதமுள்ள ஓர் இடத்தில் சுயேச்சை வேட்பாளர் வெற்றி பெற்றுள்ளார்.

பா.ஜ.க. மேயர் வேட்பாளர்கள் அம்பாலா, குருகிராம், சோனிபட், ரோத்தக், கர்னால், ஃபரிதாபாத், பானிபாட், ஹிசார் மற்றும் யமுனாநகர் ஆகிய இடங்களில் வெற்றி பெற்றுள்ளனர். மனேசரில் சுயேச்சை வேட்பாளர் இந்தர்ஜீத் யாதவ், பா.ஜ.கவின் சுந்தர் லாலை தோற்கடித்துள்ளார். மாநிலத்தில் 2024 பேரவைத் தேர்தலில் தோல்வியைத் தழுவியிருந்த காங்கிரஸ் கட்சி நகராட்சித் தேர்தலிலும் வெற்றிக் கணக்கைத் துவங்கத் தவறிவிட்டது.

குருகிராம், மனேசர், ஃபரிதாபாத், ஹிசர், ரோகிதக், கர்னால் மற்றும் யமுனா நகர் ஆகிய 7 மாநகராட்சிகளுக்கான மேயர் மற்றும் வார்டு உறுப்பினர் பதவிகளுக்கான தேர்தல் மார்ச் 2 ஆம் திகதி நடந்தது. அதேபோல், அம்பாலா மற்றும் சோனிபட் மேயர்பதவிக்கான இடைத் தேர்தல் மற்றும் 21 மாநகராட்சி குழுக்களுக்கான தலைவர்கள் மற்றும் வார்டு உறுப்பினர்களுக்கான தேர்தலும் மார்ச் 2 ஆம் திகதி நடந்தது. பானிபட் மாநகராட்சிக்கான மேயர் பதவி மற்றும் 26 கவுன்சிலர் பதவிகளுக்கான தேர்தல் மார்ச் 9 ஆம் திகதி நடந்தது. முடிவுகள் நேற்று அறிக்கப்பட்டன.




# இந்தோனேசிய சிறையிலிருந்து 54 கைதிகள் தப்பியோட்டம்!

இந்தோனேசியாவின் குடேகன் சிறைச்சாலையிலிருந்து 54 கைதிகள் தப்பியோடியுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி கைதிகள் கடந்த 10 ஆம் திகதி சிறைச்சாலை கதவுகளை உடைத்து தப்பிச்சென்றுள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு தப்பியோடிய 21 கைதிகள் சரணடைந்துள்ளனர். மேலும் 32 பேர் தலைமறைவாகியுள்ளனர் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறு தப்பிச்சென்றவர்களில் அதிகளவானோர் போதைப்பொருள் விற்பனை உள்ளிட்ட வழக்குகளின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் என சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

கைதிகள், சிறைச்சாலையின் பிரதான மற்றும் பின்புற நுழைவாயில்கள் ஊடாகவும், கூரைகளை உடைத்துக்கொண்டும் தப்பிச்சென்றனர் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தநிலையில், தப்பிச்சென்றவர்களை கைதுசெய்வதற்கான நடவடிக்கைகளை இந்தோனேசிய பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.



# உலகின் மிகப்பெரிய உதைபந்து மைதானம்

உலகின் மிகப்பெரிய மைதானத்தை மான்செஸ்டர் யுனைடெட் உதைபந்து அணி உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இம் மைதானம் இங்கிலாந்தில் உருவாக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஓல்ட் டிராஃபோர்டுக்கு அருகில் 100,000 இருக்கைகள் கொண்ட புதிய சின்னமாக இந்த மைதானம் அமைக்கப்படவுள்ளது.




# பாகிஸ்தானில் கடத்தப்பட்ட ரயிலிருந்து 155 பேர் மீட்பு, 27 தீவிரவாதிகள் கொலை

பாகிஸ்தானில் தீவிரவாதிகளால் ரயிலில் இருந்து கடத்தப்பட்டிருந்த பயணிகளில் இதுவரை 155 பேர் மீட்கப்பட்டுள்ளனர் என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மேலும் 27 தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர் என தெரிய வந்துள்ளது.

பாகிஸ்தானின் குவெட்டாவிலிருந்து பெஷாவருக்கு நேற்று முன்தினம் புறப்பட்ட ரயிலை பயங்கரவாதிகள் சிறைபிடித்தனர்.

இதில் பயணம் செய்த 30 பாதுகாப்புப் படை வீரர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

500 இற்கும் மேற்பட்ட பயணிகள், பணயக் கைதிகளாகத் தடுத்து வைக்கப்பட்டனர்.

பணய கைதிகளாகப் பிடித்து வைக்கப்பட்டுள்ள பயணிகளைச் சுற்றி தற்கொலை குண்டு தாரிகளும் இருக்கின்றனர் என தகவல்கள் வெளிவந்துள்ளன.









# இன்றைய ராசி பலன்கள் - 13.03.2025




இன்று சிறப்பான நாளாக இருக்கும். உங்கள் முயற்சி மூலம் இலக்கை அடைவீர்கள். உங்களிடம் தைரியமும் உறுதியும் நிறைந்து காணப்படும்.இன்று தன்னம்பிக்கையுடன் காணப்படுவீர்கள்.

உங்கள் பணிகளை தரத்துடன் முடித்துத் தருவீர்கள். பணியிடத்தில் உங்கள் திறமையின் மூலம் நற்பெயரை எடுப்பீர்கள்.உங்கள் பணி உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

உங்கள் துணையிடம்அன்பாக இருப்பீர்கள். அவரை மகிழ்ச்சியாக வைத்துக் கொள்வீர்கள். இதனால் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று அதிக பணப்புழக்கம் காணப்படும். புதிய முதலீடுகளில் பணத்தை சேமித்து பயனடையலாம்.

இன்று நல்ல ஆரோக்கியமும் தன்னம்பிக்கையும் காணப்படும். அதனை நீங்கள் நன்கு பயன்படுத்திக் கொள்ளுங்கள்.




இன்று வளர்ச்சி குறைவாக காணப்படும். பெரிய லட்சியங்களை அடைய இன்று சாத்தியம் குறைவாக இருக்கும். சிறப்பாக திட்டமிட்டால் இன்று வெற்றி அடையலாம்.

உங்கள் மேலதிகாரிகளால் எதிர்பாராத தொல்லைகள் ஏற்படும். கடினமான பணிகள் காரணமாக வேலையை குறித்த நேரத்தில் முடிக்க இயலாது.

உங்கள் மனதில் அசௌகரியமான உணர்வு இருக்கும்.இது உங்கள் துணையுடனான உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

பணவளர்ச்சி திருப்திகரமாக இருக்காது. இன்றைய செலவுகளை சமாளிக்க இயலாது. திட்டமிட்டுச் செலவு செய்ய வேண்டும்.

ஒவ்வாமை காரணமாக தொண்டையில் பிரச்சினைகள் ஏற்படலாம்.




இன்று அமைதியாக மகிழ்ச்சியாக இருங்கள். வெற்றி பெறுவதற்கு அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

நீங்கள் செய்யும் பணியில உங்களுக்கு திருப்தி காணப்படாது. உறுதியுடனும் கவனமாகவும் பணியாற்ற வேண்டும்.

உங்கள் துணையிடம் சகஜமாக இருக்க இயலாது. அவரை வெளியிடங்களுக்கு கூட்டிச் செல்வதன் மூலம் நீங்கள் மகிழ்ச்சியாக இருக்கலாம்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக காணப்படாது. இது உங்களுக்கு சிறிது ஏமாற்றத்தை அளிக்கும். அதிக செலவு செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்படும்.

வயிறு உபாதைகள் ஏற்படுவதற்கு வாய்ப்பு உள்ளது. சரியான நேரத்தில் உணவு உண்ண வேண்டும். கார உணவு வகைகளை தவிர்க்க வேண்டும்.




இன்று அமைதியாக இருக்க வேண்டிய நாள்.தெய்வீகப் பாடல்களை கேட்பதன் மூலம் நீங்கள் ஆறுதலைப் பெறலாம். முக்கிய முடிவுகள் எடுப்பதை இன்று தவிர்க்கவும்.

பணிச்சுமை அதிகமாக காணப்படும். உங்கள் சக பணியாளர்களின்ஆதரவு குறைந்து காணப்படும்.பெண் ஊழியர்களிடம் கவனமாக இருப்பது நல்லது.

உங்களுக்கு சில குடும்ப பிரச்சினைகள் காணப்படும். இதனால் உங்கள் பிரியமானவருடன் நேரத்தை கழிக்க இயலாது. உங்களால் முடிந்த அளவு அவருக்கு நேரம் ஒதுக்குங்கள்.

இன்று குறைந்த அளவு பணம் காணப்படும்.மேலும் பண இழப்புகள் ஏற்படாமல் இருக்க பணத்தை கண் காணியுங்கள்.




இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக இருக்கும். உங்கள் விருப்பங்கள் நிறைவேறும். இன்று எடுக்கும் முக்கியமான முடிவுகள் நற்பலன்களைத் தரும்.

நீங்கள் குறைந்த நேரத்தில் விரைவாக பணியை முடிப்பீர்கள்.இது உங்கள் சக பணியாளர்களின் கவனத்தை ஈர்க்கும். நீங்கள் தொழில் சார்ந்த அணுகுமுறையை கையாள்வீர்கள்.

நீங்கள் மகிழ்ச்சியான மனநிலையில் இருப்பீர்கள். இதனால் உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை அனுபவிப்பீர்கள். நீங்கள் வெளியிடங்களுக்கு செல்ல வாய்ப்பு உள்ளது.

இன்று அதிக அளவு பணம் காணப்படும்.அதை பயனுள்ள வகையில் பயன்படுத்துவீர்கள்.

நீங்கள் மகிழ்ச்சியான மனநிலையில் இருப்பதன் காரணமாக இன்று முழு ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.




குறைந்த முயற்சியில் உங்கள் இலக்குகளை எளிதாக அடைவீர்கள். இன்று நகைச்சுவை போக்கின் காரணமாக சிறந்ததை சாதிப்பீர்கள்.

சிக்கலான பணகளைக் கூட எளிதில் கையாள்வீர்கள். இன்று உங்களுக்கு புதிய பணிகள் வழங்கப்படும். நீங்கள் அதனை விரும்பி செய்வீர்கள்.

நீங்கள் உங்கள் துணையுடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.உங்கள் துணையிடம் நகைச்சுவை அணுகுமுறையை வெளிப்படுத்துவீர்கள்.இதனால் உறவுப் பிணைப்பு வலுப்படும்.

உங்களிடம்அதிக பணம் காணப்படும்.எளிதில் சேமிக்க இயலும்.எதிர் காலத்திற்கென சிறிது பணத்தை ஒதுக்குவீர்கள்.

இன்று நீங்கள் மிகுந்த ஆற்றலுடனும் புத்துணர்ச்சியுடனும் காணப்படுவீர்கள்.




விஷயங்களைக் கையாள்வதில் நீங்கள் மிகுந்த முயற்சி எடுக்க வேண்டியிருக்கும்.முக்கியமான முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும். இன்று சிறிதளவு பொறுமைஅவசியம்.

இன்று அதிக பணிச்சுமை காணப்படும்.ஆனால் முறையான திட்டமிடல் மூலம் சிறப்பாக செயலாற்றலாம்.உங்கள் சக பணியாளர்களை புரிந்து நடந்து கொள்ளுங்கள்.

நீங்கள் உங்கள் துணையிடம் அன்பை வெளிப்படுத்துவீர்கள்.என்றாலும் உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வு வளர சுமாரான வாய்ப்புகளே உள்ளன.

சிறிய கடன் மூலம் உங்களுக்கு பணம் கிடைக்கும். வரவு செலவு இரண்டும் கலந்து காணப்படும்.

இன்று பயணத்தின் போது அல்லது வாகனம் ஓட்டும் போது விபத்தை சந்திக்கநேரலாம்.




இன்று சற்று சிரமமான நாள். இன்று பொறுமையும் உறுதியும் மிகவும் அவசியம்.சரியான திட்டமிடல் மிகவும் அவசியம்.

இன்று பணிச்சூழல் பரபரப்பாக காணப்படும்.உங்கள் சக பணியாளர்களுடன் சில சிக்கல்கள் காணப்படும். உங்கள் பணிகளை திட்டமிடுவது நல்லது.

உங்களுக்கும் உங்கள் துணைக்கும் இடையேயான விவாதம் காரணமாக நீங்கள் சிறிது குழப்பத்துடன் காணப்படுவீர்கள்.அமைதியாக இருக்கவும் உறவில் மகிழ்ச்சியை எப்படி தக்க வைத்துக் கொள்வது என்றும் நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

இன்று அதிக பணம் சேமிக்க இயலாது.அதிகரிக்கும் செலவினங்கள் உங்களுக்கு கவலையை அளிக்கும்.

தேவையற்ற விஷயங்களுக்காக இன்று உணர்ச்சி வசப்படுவீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 13.03.2025




பிரார்த்தனை மற்றும் தியானம் இன்று உங்களுக்கு வழி காட்டும். அதன் மூலம் நீங்கள் மகிழ்ச்சி பெறுவீர்கள். இன்று அனைத்தும் உங்கள் கைகளில் தான் உள்ளது.

பணியிடச் சூழல் சவாலானதாகவும் போட்டியுடையதாகவும் காணப்படும்.கடினமாக பணி களைக் கையாள்வதை சவாலாக உணர்வீர்கள்.

இன்று உங்கள் துணையிடம் சமூகமான உறவு காணப்படாது. தேவையற்ற வாக்குவாதங்கள் ஏற்படும் கருத்து வேறுபாடு காணப்படும்.

இன்று நிதிநிலைமை கவலையளிப்பதாக இருக்கும். இன்று பணப்புழக்கம் சீராக இருக்காது. இன்று செலவுகள் அதிகம செய்ய நேரலாம்.

இன்று நல்ல ஆரோக்கியத்துடனும் அமைதியுடனும் காணப்படுவீர்கள். பிரார்த்தனை மேற்கொள்ளுங்கள்.




இன்று நீங்கள் அமைதியான அனுசரனையான போக்கை மேற் கொள்ள வேண்டும். இதனால் வளர்ச்சி ஏற்பட வாய்ப்புள்ளது. வெற்றியும் கிடைக் கும்.

இன்று பணியிடச் சூழல் கடினமாக காணப்படும். இதனால் தவறுகள் நேரலாம். இதனை தவிர்த்தல் நல்லது.

இன்று உங்கள் துணையுடனான உறவில் சுமூகமான சூழ்நிலை காணப்படாது. குடும்ப பிரச்சினை காரணமாக உங்கள் துணையுடன் வாக்குவாதம் ஏற்படலாம்.

நிதிநிலையில் ஏற்ற இறக்கங்கள் காணப்படும். பணத்தை கவனமாக கையாள வேண்டும். இல்லாவிடில் பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது.

தேவையற்ற கவலைகள் காரணமாக உங்களுக்கு தோள்களில் மற்றும் முதுகில் வலி ஏற்படலாம்.




இன்று உங்களிடம் தைரியமும் உறுதி யும் காணப்படும். இதனால் வளர்ச்சி காணப்டும். தைரியமான மனவலிமை காரணமாக வெற்றி பெறுவீர்கள்.

பணியிடத்தில் அபாரமான வளர்ச்சி காணப்படுகின்றது. பணியின மூலம் ஆதாயம்பெற இந்த நாளை பயன்படுத்திக் கொள் ளுங்கள்.

நீங்கள் உங்கள் துணையுடன் நல்லுறவை ஏற்படுத் திக் கொள்வீர்கள். பிறருக்கு உதாரணமாகத் திகழ்வீர் கள். அன்பு நிறைந்து காணப்படும்.

இன்று முக்கிய முதலீடுகள் செய்வதற்கு உகந்த நாள். அதன் மூலம் மிகுதியாக பணம் கிடைக்கும். அதன் மூலம் நீங்கள் மிகவும் மகிழ்ச்சி அடைவீர்கள்.

இன்று மிகவும் ஆற்றலுடன் காணப்படுவீர் கள்.





இன்று சிக்கலான சூழ்நிலைகளை சமாளிக்க அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். அத்தகைய சூழலில் சிறப் பாக திட்டமிட்டு செயலாற்ற வேண்டும்.

விரைந்து பணிகளை முடிக்க உங் கள் சக பணியாளர்களுடன் அனுச ரித்து நடந்து கொள்ள வேண்டும். பணிகள் அதிகமாக இருப்பதால் கட்டுப்படுத்துவது உங்கள் கைமீறிய செயலாக இருக்கும். உங்கள் திறமையை பணியிடத்தில் வெளிப் படுத்த வேண்டியது அவசியம்.

உங்களின்அகந்தைப் போக்கும் பிடிவாதமும் உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும். சூழ்நிலைக்கேற்ப நீங்கள் உங்கள் துணையுடன்அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

சில தேவையற்ற சூழ்நிலைகளை சந்திக்க வேண்டியிருக்கும்.

# கச்சதீவு அந்தோனியார் திருவிழா; முன்னாயத்தக் குழு பயணமானது!



நெடுந்தீவு பிரதேச செயலாளர் நிவேதிகா கேதீசன் தலைமையி லான குழுவினர் நேற்று கச்சதீவுக் குப் புறப்பட்டனர்.

நெடுந்திவில் இருந்து சமுத்திர தேவி படகில் முன்னாயத்தப் பணிக் கான – பிரதேச செயலர் தலைமை யிலான – குழுவினர் முதற்கட்டமாக பயணமாகினார்கள்.

இக் குழுவில் பிரதேச செயலக உத்தியோகத்தரகள், பொலிஸ் உத்தி யோகத்தர்கள், நெடுந்தீவு பிரதேச சபையினர், விழா சம்பந்தப்பட்ட நிறு வனங்களின்உத்தியோகத்தர்கள் அடங்க லான முதற்கட்ட உத்தியோத்தர் கள் இடம்பெற்றிருந்தனர்.

இந்தக் குழுவினரை நெடுந்தீவு பங்கின் அருட்த் தந்தை பரமதாஸ் பத்திநாதன் ஆசீர்வதித்து வழியனுப்பி வைத்தார்.

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய திருவிழா நாளையும் மறுதின மும் இடம்பெறவுள்ளது.